**செய்தி வெளியீடு எண்: 730** **நாள்: 05.12.2012**

## செய்தி வெளியீடு

30.11.2012 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழா நிகழ்ச்சியில் பங்கேற்க வருமாறு, முதல் சட்டமன்றப் பேரவைக்கு திருமயம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. ஆர்.எம். பழனியப்பன், புதுக்கோட்டை தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. ஆர். கிருஷ்ணசாமி கோபாலர், பொள்ளாச்சி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. என் மகாலிங்கம் மற்றும் ராசிபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. டி.எம். காளியண்ணன் ஆகியோருக்கு அழைப்புகள் விடுக்கப்பட்டன. இதன் அடிப்படையில், விழாவில் பங்கேற்ற திரு. ஆர்.எம். பழனியப்பன், திரு. ஆர். கிருஷ்ணசாமி கோபாலர், திரு. என் மகாலிங்கம் ஆகியோரை கௌரவப்படுத்தும் விதமாக, அவர்களுக்கு வைர விழா நினைவுப் பரிசுகள் அளிக்கப்பட்டன. உடல் நலக் குறைவு காரணமாக திரு. டி.கே. காளியண்ணன் அவர்களால் விழாவில் கலந்து கொள்ள இயலவில்லை.

இதனையறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உடல் நலக் குறைவு காரணமாக விழாவில் பங்கேற்க இயலாத திரு. டி.எம். காளியண்ணன் அவர்களின் இல்லத்திற்கு சென்று வைர விழா நினைவுப் பரிசினை அவரிடம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற தனது எண்ணத்தினை வெளிப்படுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் விருப்பத்திற்கிணங்க, மாண்புமிகு போவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள், ராசிபுரத்தில் உள்ள திரு. டி.எம். காளியண்ணன் அவர்களின் இல்லத்திற்கு இன்று (5.12.2012) சென்று பொன்னாடை அணிவித்து, வைர விழா நினைவுப் பரிசினை அவரிடம் வழங்கி கௌரவித்தார்.

இதனைப் பெற்றுக் கொண்ட திரு. டி.எம். காளியண்ணன் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 5.12.2012